## மே - 3

**"பலமான ஆகாரமானது, நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை உடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்."**

**- எபி 5 : 14**

தேவனிடத்தில் உண்மையான கபடமற்ற விசுவாசம் வைத்திருக்கிறவர்கள் அவருடைய வார்த்தையில் அவரை ஏற்றுக்கொள்ள இஷ்டமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்களிடத்தில் உபதேசத்தின் முதல் தத்துவங்கள் வெகு காலத்துக்கு முன்பே நிலை நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். தங்கம், வெள்ளி விலையுயர்ந்த கற்கள் ஆகிய இவைகளாலான மேல் கட்டடத்தின் மிச்சமான பாகம் ஏற்கனவே எழுப்பபட்டு அதன் வேலை தினமும் நடந்தேறிக் கொண்டிருக்க வேண்டும். தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயும் உண்மையுள்ளவர்களாயும் இருப்பார்களானால், அப்படிப்பட்டவர்கள் சத்தியம் எது? வஞ்சகம் எது? என்றும் கண்டுக்கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். எதை நாம் நம்புகிறோமென்றும், ஏன் அதை நாம் நம்புகிறோம் என்றும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். பிறகு அதை அறிவிப்பதில் நாம் தைரியமுள்ளவர்களாகவும், பிடிவாதமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், "எக்காளமும் விளங்காத சத்தமிட்டால், எவன் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணுவான்?"

**-Z '03, 167(R 3199)**

இயற்கையான குழந்தைகளுக்கு பலமுள்ள ஆகாரத்தை ஜீரணிக்கப் போதுமானபடி பலமுள்ள சரீர உறுப்புக்கள் இல்லாதது போல, ஆவிக்குரிய குழந்தைகளுக்கு பலமுள்ள ஆவிக்குரிய ஆகாரத்தை ஜீரணம் செய்து கொள்ள போதுமான பலமுள்ள உறுப்புகள் இருக்கிறதுமில்லை. ஒருவன் மிகவும் ஆழமான சத்தியங்களை உட்கிரகித்துத் தன்மயமாக்க கிறிஸ்துவில் தகுந்த விதமாக நன்றாக அபிவிருத்தி செய்திருக்க வேண்டும். ஆவிக்குரிய விஷயங்களிலுள்ள மனது சம்பந்தமான, நீதிநெறி சம்பந்தமான, தேவபக்தி சம்பந்தமான திறமைகளுக்கு இடையறாத பயிற்சிக் கொடுப்பதினால் மாத்திரமே அப்படிப்பட்ட அபிவிருத்திப் பெறப்படுகிறது. இயற்கையான தசைகளைப்போல, ஆவிக்குரிய தசைகளும் பயிற்சியினால் பலப்படுத்தப்படுகின்றன.

**- P '34, 62.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

எரே 15:16; எசே 3:3; ஆமோ 8:11-13; ரோம 16:19; 1கொரி 2:6-16; 13:11; 14:20; 1பேது 2:2; சங் 119:99; 131:2; எபே 3:5; 4:13-15; கொலோ 3:16; 2தீமோ 3:15-17; எபி 6:1; 2பேது 3:16,18; யாக் 1:18-25.

**கோபுர வாசிப்பு** : Z '15, 151(R 5688).

**வினாக்கள் :** இந்த வாரத்தின் அனுபவங்கள் இந்த வசனத்துக்கு எவ்வாறு ஒத்திருந்தன? அவற்றிலிருந்து நான் என்ன நன்மையை அடைந்தேன்?